**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W.** 3

Name : பேபி

S/o, D/o, W/o : வசந்தன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:02.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் நல்லவிளையில் வசித்து வருகிறேன். வீட்டு வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்குத் தெரியும். எனது வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரியையும் தெரியும். சம்பவம் பற்றி எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு ஆஜர் எதிரி அ.சா.1ஐ இருசக்கர வாசனத்தை வைத்து மோதியும், கேரியரை எடுத்து தலையில் அடித்தும், மார்பில் எட்டி உதைத்தும் கொலை செய்ய முயற்சி செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எதிரி தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

Name :ஷீலா
S/o, D/o, W/o :ஜஸ்டின் ராஜ்
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
Dated:02.07.2025

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் ஆலக்காவிளை, சாய்க்கோட்டில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் கணவர், புதுக்கடை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தார். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி மீது பல்வேறு வழக்குகள் உள்ளது. தக்கலை போலீசார் எதிரியை கைது செய்து கொண்டு சென்றார்கள். அதற்கு என் கணவர் தான் காரணம் என்று சொல்லி இருவருக்கும் பிரச்சனை உண்டு. 2016ம் ஆண்டு ஒரு நாள் இரவு வீட்டிற்கு முன்பு வைத்து எதிரி சத்தம் போட்டு எங்கு பார்த்தாலும் கொன்று விடுவதாக சொன்னார். 28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு நல்லவிளையில் வைத்து என் கணவர் வேலைக்கு சென்று கொண்டிருந்த போது எதிரி இருசக்கர வாகனத்தை வைத்து மோதி என் கணவரை கீழே தள்ளி இருசக்கர வாகனத்தின் பகுதியை வைத்து



கன்னத்தில் குத்தினார். காலிலும் அடித்தார். வலது கணுக்காலிலும், வலது முழங்காலிலும் அடித்தார். ஆட்டோவில் என் கணவரை தக்கலை

மருத்துவமனைக்கு அழைத்து போனேன். என் கணவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்ற பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளார். எனவே, சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W.** 5

Name : ஆன்றோ

S/o, D/o, W/o :பொன்னுபிள்ளை

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:02.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் ஆலக்காவிளை, சாய்க்கோட்டில் வசித்து வருகிறேன். வெல்டிங்வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 28.02.2023ம் தேதி 01.15 மணிக்கு எனது வீட்டிலிருந்து 100 மீட்டர் தொலைவில் நல்லவிளை என்ற இடத்தில் போலீசார் விசாரித்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள். அப்போது தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், சேம்ராஜும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 அத்தாட்சி அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்ற பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளார். எனவே, சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W.** 6

| | |
|---|---|
| Name | : சேம்ராஜ் |
| S/o, D/o, W/o | : செல்லன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**02.07.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் ஆலக்காவிளை, சாய்க்கோட்டில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 28.02.2023ம் தேதி 01.15 மணிக்கு எனது வீட்டிலிருந்து 100 மீட்டர் தொலைவில் நல்லவிளை என்ற இடத்தில் போலீசார் விசாரித்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள். அப்போது தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் நானும், சேம்ராஜும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்ற பணி புறக்கணிப்பில் ஈடுப்பட்டுள்ளார். எனவே, சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது.